ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | 7/13/AD/1 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 05.01.2018 |

சுற்றுநிருப இலக்கம் 01/2018

சகல கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளர்கள் மற்றும்
சகல கமநல சேவைகள் குழுவின் நிறைவேற்றுச் செயலாளர்கள்.

**<u>கமத்தொழில் காணி இடாப்பு பொதுமக்கள் பரிசீலனைக்காத் திறந்து வைத்தல் மற்றும் திருத்தத்தின் பொருட்டு உரிமை /எதிர்ப்பு அறிவித்தலைக் கையேற்றல் - 2018</u>**

2011 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தித் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 53(4)(அ) உப பிரிவிற்கமைய ஒவ்வொரு கமநல சேவைகள் குழுக்களினால் பேணப்பட்டு வரும் கமத்தொழில் காணி இடாப்பை (மேட்டுக் காணி மற்றும் வயற் காணி) பொது மக்கள் பரிசீலனைக்காகத் திறந்து வைப்பதற்குரிய அறிவுரைகளை இத்தால் வழங்குகின்றேன்.

02. ஏதேனும் கமநல சேவைகள் குழுவொன்று 2017 ஆம் வருடத்தில் முடிவுறுவதற்கு ஏற்பாடாகியிருந்த வயற்காணி மீளத்திருத்த வேலைத்திட்டத்திற்குரிய உரிமை எதிர்ப்பு காலம் முடிவுற்று, வயற்காணி இடாப்பினை எழுதுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இவ் இடாப்புக்களை உரிமை எதிர்ப்பின் பொருட்டு பொதுமக்கள் பரிசீலனைக்காக திறந்து வைத்தல் வேண்டும். அத்துடன் சகல கமத்தொழில் (மேட்டு) காணி இடாப்புக்களின் பொருட்டும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

(அ) இதன் பொருட்டு 2017 ஆம் வருடத்தில் மீள் திருத்தம் செய்யப்பட்டு, அத்தாட்சிப்படுத்தப்பட்ட வயற்காணி இடாப்புக்கள் அல்லது மீள்திருத்த வேலைத்திட்டத்தின் கீழ் முடிவுறுத்தப்பட்ட வயற்காணி இடாப்பின் வரைபினையும் பயன்படுத்தலாம்.

(ஆ) 2018 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 31 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் ஒவ்வொரு வார நாட்களிலும் (திங்கள் தொடக்கம் வெள்ளி வரையில், அரசாங்க வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரையில் உரிய கமநல சேவைகள் நிலையத்தில் இவ் இடாப்பை பொதுமக்கள் பரிசீலனைக்காத் திறந்து வைத்தல் வேண்டும்.

(இ) பொது மக்களினால் இவ்இடாப்பை பரிசீலனை செய்யும் போது பரிசோதித்துப் பார்ப்பவர்களுக்கு ஒத்துழைப்பினை வழங்கும் பொருட்டு போன்று குறித்த இடாப்பின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு நாட்களுக்கும் கமநல சேவைகள் நிலையத்திற்கு அறிக்கையிட்டுள்ள பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தொருவரை பெயர் குறிப்பிட்டு அவரது சேவையை இதன் பொருட்டு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව, අංක 42, ශ්‍රීමත් මාර්කස් ප්‍රනාන්දු මාවත, තැ. පෙ. 537, කොළඹ 07.
கமநல அபிவிருத்தித் திணைக்களம், இல. 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, அ. பெ. 537, கொழும்பு 07.

DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT, NO. 42, SIR MARCUS FERNANDO MAWATHA, P. O. BOX 537, COLOMBO 07

දුරකථන/தொலைபேசிகள்/Telephones :
පොදු කාර්යාලය / பொது அலுவலகம் / General Office: 2694231, 2694232, 2694233, 2694234
ගොවිජන සංවර්ධන කොමසාරිස් ජනරාල් / கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் / Commissioner General of Agrarian Development: 2691060
ෆැක්ස් / தொலை நகல் / Fax: 2693572, 2691843, 2674481
E-mail : commissionerdad@yahoo.com
විදුලි පණිවුඩ / தந்தி / Telegram: ගොවිජනසේවා / கொவிசேவா / Agraservis

(ஈ) கமத்தொழில் காணி இடாப்பு (வயற்காணி மற்றும் மேட்டுக் காணி) 2018 வருடத்தின் பொருட்டு பொது மக்கள் காட்சியின் பொருட்டு வைத்திருக்க வேண்டிய திகதி மற்றும் நேரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

**முதலாவது தடவை**

| | | |
|---|---|---|
| பொது மக்கள் காட்சியின் ஆரம்பம் | - | 2018 ஜனவரி 01 |
| பொது மக்கள் காட்சி முடிவு | - | 2018 ஜனவரி 31 |
| உரிமை அல்லது எதிர்ப்பு கையேற்றுக் கொள்ளும் இறுதித் திகதி | - | 2018 பெப்ரவரி 28 |

**இரண்டாவது தடவை**

| | | |
|---|---|---|
| பொது மக்கள் காட்சியின் ஆரம்பம் | - | 2018 ஜூலை 01 |
| பொது மக்கள் காட்சி முடிவு | - | 2018 ஜூலை 31 |
| உரிமை அல்லது எதிர்ப்பு கையேற்றுக் கொள்ளும் இறுதித் திகதி | - | 2018 ஆகஸ்ட் 31 |

(உ) இதன் பொருட்டான கட்டண அறவீடு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளல் வேண்டும்.

இடாப்பு பரிசீலனையின் பொருட்டு எவ்வித அறவீடுகளுகம் மேற்கொள்ளப்பட மாட்டாது.

உரிமை அல்லது எதிர்ப்பு விண்ணப்பப்படிமொன்றின் பொருட்டு - ரூபா 50.00

விசாரணை நடவடிக்கைகளின் பொருட:டு கமநல சேவைகள் குழுவிற்கான கட்டணம் - ரூபா 150.00

இதன் பொருட்டு ஒரு விண்ணப்பப்படிவத்திற்காக அறவிடக் கூடிய ஆகக் கூடிய தொகை-ரூபா 200.00 ஆகும்.

விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் உரிமை அல்லது எதிர்ப்பு, கமத்தொழில் காணி இடாப்பிற்கு உட்படுத்தப்படாமை அல்லது தவறாக குறிப்பிடப்பட்டிருத்தல், இத்திணைக்களத்தின் அல்லது கமநல சேவைகள் குழுவின் ஏதேனும் தவறால் ஏற்பட்டிருப்பின், மேற்படி கட்டணத்தை விண்ணப்பதாரியிடமிருந்து அறவிட்டுக் கொள்ளாது, இலவசமாக குறித்த திருத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஊ) கமத்தொழில் காணி இடாப்பு பொது மக்கள் காட்சிக்காக திறந்து வைக்கப்படும் திகதி மற்றும் நேரம், உரிமை மற்றும் எதிர்ப்பு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றம் கமநல சேவைகள் குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் தொடர்பாக பிரதேசத்தின் விவசாயிகளை அறிவூட்டும் பொருட்டு சகல கமநல சேவைகள் குழுவினாலும் வி.ஆ.உ.உ. உத்தியோகத்தர்கள், கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்கள், அறிவித்தல்களை காட்சிப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் போதுமானளவில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

ஏதேனும் கமநல சேவைகள் குழுவொன்று 2017 ஆம் வருடத்தில் முடிவுறுத்தப்பட வேண்டிய வயற்காணி இடாப்பு மீள்த்திருத் வேலைத்திட்டத்திற்குரிய இடாப்பினை இதுவரையில் பொது மக்கள் காட்சியின் பொருட்டு திறந்து வைத்திருக்காத சந்தர்ப்பத்தில், இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தச் செயற்பாட்டிற்குரிய அறிவுரைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளலாகாது என்பதுடன், அவ்வாறன சந்தர்ப்பத்தில் கூடிய விரைவில் பிரதான காரியாலயத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவினை அறிவூட்டி, வயற்காணி இடாப்பின் மீள்த்திருத்த வேலைத்திட்டத்திற்குரிய இடாப்பினை பொதுமக்கள் காட்சியின் பொருட்டு திறந்து வைக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன், இதன் பொருட்டு ''வயற்காணி இடாப்பு மீள்திருத்தம்'' தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்

இருப்பினும் வயற்காணி இடாப்பு மீள்திருத்த வேலைத்திட்டத்தினை இதுவரையில் முடிவுறுத்தாதுள்ள கமநல சேவைகள் நிலையங்களில் கமத்தொழில் (மேட்டு) காணி இடாப்புக்களை பொது மக்கள் காட்சியின் பொருட்டு இவ் அறிவுரைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

இந்நாட்டின் சகல கமத்தொழில் காணி இடாப்புக்களும் திருத்தம் செய்யப்பட்டு இற்றைப்படுத்தி பேணுதல் 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கமைய நிறைவேற்றப்பட வேண்டிய சட்டரீதியான தேவைப்பாடு என்பதுடன், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினதும் மற்றும் சகல கமநல சேவைகள் குழுக்களினதும் பிரதான பொறுப்பாகும் என்பதால், இந்நடவடிக்கையினை வெற்றியுரச் செய்யும் பொருட்டு முதன்மை அவதானத்தை வழங்குவதற்கு தாங்கள் உட்பட அனைவரும் செயற்படுவீர்கள் என நம்புகின்றேன்

**ஒப்பம்**: டீ.வீ. பந்துலசேன,
**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் (ப.க.)**

**பிரதிகள்:**

1. செயலாளர், விவசாய அமைச்சு
2. செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு
3. செயலாளர், மஹாவெலி மற்றும் சுற்றாடல் அமைச்சு,
4. நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்,
5. விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்.
6. மஹாவெலி அபிவிருத்திப் பணிப்பாளர் நாயகம்.
7. சகல மாவட்ட செயலாளர்கள்,
8. கமநல அபிவிருத்தி பிரதான காரியாலயத்தின் சகல மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்கள்.